# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவொற்றியூர்</u>

# <u>OS.No. 42/2021</u>

இந்நீதிமன்றத்து எழுத்தர் திரு.விஸ்வநாதன், உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2023 ஆண்டு டிசம்பர் மாதம் 07-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 07.12.2023**

**பெயர் - ராஜலட்சுமி**

**க/பெ - கோபி**

**வயது - 34**

**ஊர் - எண்ணூர்**

**தொழில் - இல்லத்தரசி**

**சாட்சி - PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்- 11 .25 AM**

**<u>முதல் விசாரணை</u>-**

1. நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனது வாக்குமூலம் பிரமான பத்திரம் மூலம் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. எனது வழக்கிற்கு ஆதரவாக கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

2 (1) 23.05.2017 தேதியிட்ட தண்டையார்பேட்டை வட்டம் வட்டாச்சியர் அவர்கள் அளித்த கலப்பு திருமண சான்று **வா.சா. ஆ 1** எனவும்.

(2)04.01.2020 தேதியிட்ட கிஸ்து வரி ரசீது அசல் **வா.சா.ஆ 2** எனவும்.

(3) மனு ரசீது எண் 156/2020 எண்ணூர் காவல் நிலையம் அசல் **வா.சா. ஆ**3 எனவும்.

(4) மனு ரசீது எண் 209/2020 எண்ணூர் காவல் நிலையம் அசல் **வா.சா. ஆ**4 எனவும்.

(5)17.12.2020 தேதியிட்ட WP.No.17035/2020ல் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்ட்ட உத்தரவின் சான்றிட்ட நகல் **வா.சா, ஆ5** எனவும்.

(6)04.01.2021 தேதியிட்ட WP.No.17035/2020ல் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்ட்ட உத்தரவின் சான்றிட்ட நகல் **வா.சா. ஆ6** எனவும்,

(7)23.09.2021 தேதியிட்ட crl.OP.No.17177/2021ல் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் சான்றிட்ட நகல் **வா.சா, ஆ 7** எனவும்

(8)10.08.2022 தேதியிட்ட crl.MP.No.5154/2022 in crl.OP.No.17177/2021ல் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்ட்ட உத்தரவின் சான்றிட்ட நகல், **வா.சா. ஆ8** எனவும்.

(9) மனு ரசீது எண் 697/2021 எண்ணூர் காவல் நிலையம் அசல் **வா.சா. ஆ 9** எனவும்.

(10) 01.12.2022 தேதியிட்ட எனக்கு அளிக்கபட்ட பிறப்பிட சான்றிதல். கணினி வழி எடுக்கப்பட்ட நகல் **வா.சா.ஆ 10** எனவும்.

(11) 01.12.2022 தேதியிட்ட எனக்கு அளிக்கப்பட்ட இருப்பிட சான்றிதழ், கணினி வழி எடுக்கப்பட்ட நகல் **வா.சா.ஆ 11** எனவும்.

(12) எனது பெயரில் உள்ள மின்கட்டண அட்டை மின் இணைப்பு எண் 023-022-2808 (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட ஒளி நகல்) **வா.சா.ஆ 12** எனவும்.

(13) சமையல் எரிவாயு வாங்கியதற்கான ரசீதுகள் அசல் (6 எண்ணிக்கைகள்) **வா.சா.ஆ 13 ( வரிசை 1 முதல் 6 ).**

(14)எனது குடும்ப அட்டை.(அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட ஒளி நகல்) **வா.சா.ஆ 14** எனவும்.

(15)எனது ஆதார் அட்டை.(அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட ஒளி நகல்) **வா.சா.ஆ 15** எனவும்.

(16) என்னுடைய கணவரின் ஓட்டுநர் உரிமம் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட ஒளி நகல்) **வா.சா.ஆ 16** எனவும்.

**(மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.)**

**விசாரணை முடியும் நேரம் : 12.00 P.M**